DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.34/2023**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | விஜயகுமார் | Caste: | |
| Father's Name: | கருப்பையா | Calling: | செங்கல் காளவாசல் |
| Village: | பொட்டித்தட்டி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.01.2026

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா பொட்டித்தட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். கள்ளியடியேந்தல் கிராமத்தில் செங்கல் சூளை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா1 ராஜேந்திரனை தெரியாது. அ.சா.2 ராஜேஷ்வரியை தெரியாது. அ.சா.3 மோகன்தாஸை தெரியும். எதிரியை தெரியும். பக்கத்து ஊரை சேர்ந்தவர். அ.சா.4 சிவக்குமாரை தெரியாது. அ.சா.1 ராஜேந்திரன் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5**. அந்த கையெழுத்துக்களை போலிசார் கேட்டு என்னுடைய சேம்பரில் வைத்து 4 வருடங்களுக்கு முன்பு போட்டுக்கொடுத்தேன். எதற்காக போட்டேன் என்றால் போட சொன்னதால் போட்டேன்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 25.01.2023ம் தேதி காளவாசலில் நடந்த சண்டை சம்பந்தமாக பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருப்பதாகவும் மேற்படி விசயத்தை என்னிடமும் பாண்டி மகன் சிவகுமாரிடமும் எடுத்துக்கூறி சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் சாட்சியாக நானும் சிவகுமாரும் கையெழுத்து செய்தோம் என்றும் அதே நாளில் காலை 8.00மணியளவில் சம்பவ இடத்தில் இருந்த சிமெண்ட் கல்லை எங்கள் முன்னிலையில் பரமக்குடி டிஎஸ்பி அவர்கள் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் சிவகுமாரும் கையெழுத்து செய்தோம் என்றும் கடந்த 31.01.2023ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லிவிட்டு சம்பவம் நடந்த பகுதியில் காளவாசல் தொழில் செய்துவருவதால் எதிரிகள் தயவு தேவை என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.12 16:29:08 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)